நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை
தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 6
தொகுதி: 114
திருவள்ளுவர் ஆண்டு 2051

திங்கள் இதழ்
விலை: ரூ.20
ஜூன் - 2020

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர் இரா.சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையன்	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு.வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் - பேராசிரியர் இரா. சதாசிவம் 4

2. சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா 8
   - முதுமுனைவர் இரா. இளங்குமரன்

3. தொல்காப்பியமும் கடைச்சங்க இலக்கியங்களும் : காலம், மொழி, உறவு
   - பேராசிரியர் ப. மருதநாயகம் 10

4. ஆசாரிய ஹ்ருதய ஸாரம் என்னும் மாறன் திருவுள்ளம்
   - பேராசிரியர் இ.கி. இராமசாமி 36

5. சங்கச் செய்தி 42

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள் கட்டணம்	ரூ,3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க் கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.சதாசிவம்

பேராசிரியர் இரா.இளங்குமரனார் குறுந்தொகை 224-ஆம் பாடலுக்கு விளக்கம் அளித்துள்ளார். அபபெருமகனார் கூவன் மைந்தனார் பயன்படுத்திய "அ.்.றிணை ஊமன்" என்னும் தொடரை விளக்கியுள்ள செய்தி மாவும் மாக்களும் அ.்.றிணை என்னும் தொல்காப்பியத் தொடரை நினைவுபடுத்தியது. அறிவுடையோர் பிறர் துன்பத்தைத் தனதாக நினைத்து மனத்தில் இரக்க உணர்வு கொள்வர். இவன் ஊமன் ஆயினும ஆவின் துயரத்தை தன்னதாக நினைந்து மனம் படும் அவலம் அவனை உயர்ந்தோனாகக் காட்டுகிறது. அதனால் கவிஞர் அவனை உயர்திணை ஊமன் என அறிவினால் ஆகிய அன்புக்கு உபகாரபபடுத்தி தலைவியின் உணர்வை வெளிப்படுத்திக் கற்பவர் நெஞ்சில் உலகம் தழுவிய அன்பின் மெய்ப்பாட்டைக் காட்டியதாகவே எண்ணத் தூண்டுகிறது. பிறர் துன்பத்தைப் பொருட்படுத்தா இழிந்த கூட்டம் பிற உயிர்களுக்குத் தீங்கு இழைப்பதை நினைக்க அவர்கள் அ.்.றிணையாகவே கருதத் தக்கவர்கள். இங்கே ஊமன் பிற உயிர்களின் மேல் கொண்ட இரக்க உணர்வினால் உயர்திணை ஊமன் ஆகின்றான் என்ற குறுந்தொகைப் பாடல் படித்து இன்புறத்தக்கது. புலவர் கவிதையில் பயனபடுத்தும் சொற்றொடாகள் நவில்தொறும் புதிய பயன்விளைக்கும் என்பது இத்தொடருக்கும் பொருநதும்.

பேராசிரியர் இளங்குமரனார் சானறோருக்கு விழா என்பதால் விழாவில் சிறப்புரை வழங்குவது போல சிறப்பான சிந்தனைச் சிதறல்கள வெளிவருவது இயல்புதானே. பேராசிரியர் ப.மருதநாயகம அவர்கள எழுதிய "தொல்காப்பியமும் கடைச்சங்க இலககியங்களும்: காலம, மொழி, உறவு" என்னும் கட்டுரை இடம்பெறுகிறது.

இக்கட்டுரையின் ஒவ்வொரு தொடரும் தமிழ் இலக்கிய மாணவர்கள ஆழ்ந்து சிந்திததுக கற்க வேண்டிய செய்திகளை உள்ளடக்கியுள்ளது. தமிழ் இலக்கிய இலக்கண வரலாற்றின் தொன்மையைப் பன்முகப் பார்வையோடு எடுத்துரைக்கிறது. தொல்காப்பியத்தின் உள்ளடக்கம், குறுந்தொகை நூற்பாக்களின் காலத்தின் தொன்மை, தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர் ஆய்வுரை ஆகியவை முச்சங்க வரலாற்றை வரையறுப்பதற்கு உதவும் நெறிமுறைகளை ஆசிரியர் எடுத்துரைப்பது கல்வியின் பரப்பையும் ஆழத்தையும் மாணவர்கள் உணாந்து போற்ற வேண்டிய செய்தியாகும்.

பல ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த யூதர்களின் பழைய ஏற்பாடு சங்க இலக்கியத்தைப் பதிவு செய்திருப்பதையும் மேலை நாட்டு அறிஞர்கள் சுடடும் செய்தியும் தமிழ் இலக்கியத்தின் வீச்சு, தூர தேசங்களிலும் எடுத்து ஓதப்பட்டுள்ள உண்மையும் எண்ணத்தக்கது; பழைய உலகம் என்பது எத்தியோப்பியா, லிபியா, எகிப்து தொடங்கி நடுத்தரைக்கடல் கிரேக்கம், இத்தாலி, பிரான்சு வரையிலான நாடுகளைக் குறிக்கும் ஆசியா மைனர் என்பர். அப்பேருலகத்திலும் தமிழ் இலக்கியம் மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஆட்சி செய்ததால் அவர்கள் விரும்பிப் போற்றியுள்ளனர்; வாணிகப் பெருமக்கள் வழியாக இவ்விலக்கியங்கள் சென்றடைந்திருக்க வேண்டும் என்னும் ஆசிரியர் கூறும் செய்தி அறிதற்குரியது உலகத்தவர் விரும்பும் பொருள் அறிவு; உலகம் தழுவியது ஒட்பம்; ஆகையால் சங்க இலக்கியம் உலகத்து அறிஞர் கருத்தில் இடம்பெற்றுள்ளது. சஙக இலக்கியம் வெளிவந்த காலம் தொடங்கி அதனை ஆய்வு செய்த அறிஞர் பெருமக்களின் கருத்துக்களை வகைமைப்படுத்தித் திறனாய்வு செய்திருக்கும் செய்திகள் எல்லாம் மாணவாகள் மீண்டும், மீண்டும் கற்று இனபுறத்தக்கது.

எழுத்ததிகாரத்தின் மொழி இலக்கணம் கடைச்சங்க இலக்கியங்களுக்கும் முன்பு இருநத வழக்கை உறுதிபபடுததுவதை ஆசிரியர் நுண்ணிதின் ஆராய்ந்து விளக்கியுள்ள செய்தி உள்ளது சிறத்தல் என்னும் வகை சார்ந்தது; கற்பனைக் கூற்று அல்ல என்பதை உணர்த்துவதாகும். மொழிநூல் அறிஞர்களின் இச்செய்தி மேலும் ஆராய்வதற்குரிய வாய்ப்பை மாணவ உலகிற்கு வழங்கியுள்ளது.

சிவஞானமுனிவர், தனிநாயக அடிகளார், வெள்ளைவாரணனார், இலக்குவனார் போன்ற சான்றோர்கள் கருத்துக்களை எடுத்துரைத்துக் கட்டுரையை வளப்படுத்தியிருப்பதும் மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் கைம்பிரான், பிவின்சுவா குபே போன்ற அறிஞர்களுடைய கருத்துரைகளை எடுத்து விளக்கி இருப்பதும் மாணவர்கள் உளம்கொள்ளத்தக்கதும் அவர்களுடைய நூல்களைப் படிக்க முனைவதும் இன்றியமையாத செய்தி.

பேராசிரியர் இ.கி.இராமசாமி, “ஆசாரிய இருதய சாரம் என்னும் மாறன் திருவுள்ளம்” என்னும் தலைப்பில் கட்டுரை வரைந்துள்ளார் திருகுருகூர் மாறன், சடகோபன் என வைணவப் பெருமக்கள் திருவாய்மொழி ஆசிரியர் நம்மாழ்வாரைப் பக்தி சிரத்தையுடனும் பேரன்புடனும் போற்றுவர்.

பெருமாளைப போற்றுகின்ற நாலாயிரம் திருப்பாடல்களுள் திருவாய்மொழியை நாள்தோறும் பெருமாள் திருவீதி எழுந்தருளும் போது பெருமாளுக்கு முன்பு வைணவப் பெருமக்கள் அதற்குரிய பாவததுடன் பாடி இன்புறுவர்; அதனைத தவறவிட்ட குற்றத்திற்காக உயர்நீதிமன்றம் அண்மையில் கோயில் நிர்வாகத்தைக் கண்டித்துத் தீர்பபு ஒன்றை வழங்கியுள்ளது.

வைணவத் திருக்கூட்டத்தைச சேர்ந்தவர்கள் அண்மைக்காலத்தில் தமிழ்த் திருப்பாடல்களினும் வேற்றுமொழிச் சொற்கள் உயர்ந்தன என்னும் தவறான எண்ணமே இதற்குக் காரணமாகும். அக்கூற்றை மறுத்துப் பேரறிஞர் ப.மருதநாயகம், அத்திப்பட்டு கிருட்டிணசாமி ராமானுசன் போன்ற அறிஞர்களை மேற்கோள் காட்டிப் பேராசிரியர் இ.கி.இராமசாமி எழுதியுள்ள கட்டுரை திருவாய்மொழியின் ஏற்றத்தை வலியுறுத்துகிறது இச்சமயத்தில் தற்காலத்தில் அறிஞர்கள் கூறுவதை ஒருவேளை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களுக்குத் திருவாய்மொழி பத்தாம்பத்து ஏழாம் திருவாய்மொழி பாட்டு ஐந்தில் புருசோத்தமனார் சென்னைப் பல்கலைக்கழகத் திருவாய்மொழி உரை கூறும் கீழ்வரும் செய்தி கற்று உணர்தல்பாலது.

“நம்பி திருவழுதி நாடுதாசர் அருள் கொண்டாடும் என்கிற பாட்டிலே கீதையைக் கற்றான் ஒருவன் காலை நேரத்திலே ஒரு சபைக்குச் சென்றால் பலருமாக நாழி அரிசியைக கொடுத்து நம்ப மாட்டாமையாலே ‘புறத்திணையிலேகிட’ என்பார்கள்.

திருவாய்மொழி கற்றான் ஒரு விண்ணப்பம் செய்வான் சென்றால் சர்வேசுவரன் அகப்பட புறப்பட்டு எதிர்கொண்டு அகம் ஒழித்துக் கொடுத்து அமுதுபடியும் எடுத்துவிட்டு உபசரிப்பார்கள்” என்றாராம்.

இத்திருவாய்மொழி வியாக்கியானம் கீதையைக் கூறியவன் பெருமாள் என்பதை நம்ப முடியாது திருவாய்மொழியைக் கூறிய சடகோபரே பெருமாள் என்பதை உறுதிசெய்கிறது. இச்செய்திகளை அறிந்து உணரும் வாசகர்கள் திருவாய்மொழியின் தமிழ் இன்பத்தையும் பக்திச் சுவையையும் நம்முன்னோர் கற்று உணர்ந்ததையும் அதனை மறந்த கால வழுவையும் நன்கு உணர்வர்.

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

முதுமுனைவர் இரா.இளங்குமரன்

13. கூவன்மைந்தனார்

கூவல் - என்பது கிணறு. களர்நிலம், செவல்நிலம, கறபாறை ஆகியவற்றை அகழ்ந்தும், தோண்டியும், கல்லியும் நீர் கொள்வதற்குச் செய்யப்பட்டக் கேணியும் கிணறும என்பது சங்கப் பாடல்களால் விளங்குகின்றது. (புறம்.306,311,319,331) ஆனால, இக்கூவல் ஆழமும் அகலமுமம மிக்கது என்பது **குரால் ஆன்** வீழ்ந்தது கொண்டு அறியலாம. **குரால் ஆன்**- செந்நிறபபசு. ஒரு குரால் பசு; அதற்கு உரியவன் மூங்கையனாம் ஊமன்; பொழுது, இரவு; பசு கிணற்றுள் (கூவலுள்) விழுந்துவிட்டது அதனைச் சொல்ல முடியாமல் அவன்படும் துயரம் போலத் தலைவனைப் பிரிந்த தலைவி துயரப்படுவதாகக் கூறியதால் இதனைப் பாடியவர் பெயர் **கூவல் மைந்தன்** எனபபட்டதாம். சங்கத்தார் மரபு '**கூவன் மைந்தனார்**' என்பதே. தலைவன் பிரிவால் தலைவி துயரப்படுகிறாள் பிரிவுக் கவலையொடு தலைவன் பிரிந்து சென்ற காட்டில் அவனுக்கு உண்டாம் துயரையும் உடையவள் ஆனாள்; தலைவி படும் துயர் கண்டு அவள் தோழிபடும் துயர் மிகப்பெரிதாயிற்று. அத்துயர் முன்னைத் துயர்களினும் பெருந்துயர் ஆக்குவதாயிற்று. அத்துயரை யாரிடம் சொல்வாள்? எப்படிச் சொல்வாள்? அவள் சொல்லமாட்டாமை,

> **கூவல், குரால் ஆன் படுதுயர் இராவில்கண்ட**
> **உயர்திணை ஊமன் துயர் போல**

ஆயிற்று என்பது இதன் கருததாம். **அஃறிணை ஊமன்** என்பது கூகை, கோட்டான். **உயர்திணை ஊமன்** என்பது கூகையை விலக்கி, மூங்கையனைக் குறித்தது இககால 'மாற்றுத் திறனாளியர்' அவர். தம் கருததை வெளிப்படுத்தவல்ல பயிற்சி பெற்றுச் சிறக்கின்றார். பல்வகைத் திறன்களில் சிறந்து விளங்குகின்றார்

பிரிவிடை இறந்துபடும எனக் கவன்ற தோழி கேட்பக் கிழத்தி உரைத்த கூற்றுவகையதாம் இப்பாடல்.

கவலை யாத்த அவல நீளிடைச்
சென்றோர் கொடுமை எற்றித் துஞ்சா
நோயினும் நோயா கின்றே: கூவல்
குரால் ஆன் படுதுயர் இராவில் கண்ட
உயர்திணை ஊமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் தோழி நோய்க்கே.
(குறுந்.224)

அரும்பொருள்

கவலையாத்த – பல வேறாகப் பிரிதல் அமைந்த; அவலம்-துயரம்; எற்றி-வருத்தி; துஞ்சா-உறங்காத; தோழி நோய்க்கே - தோழிபடும் துயர்க்கே.

ஒப்பு நோக்கு: காரிருள் இரவில் கப்பலில் போனான் ஒருவன்; அவன் 'கண்ணில் ஊமன்'; கப்பலோ புயலால் கவிழ்ந்தது. அவன் நிலை யாதாம்? பார்வை இல்லை; ஊமன் ஆதலால், சொல்லவும் முடியாது; செவியும் கேளாது; அத்துயர் படுகின்றேன் என்பது பெருஞ்சித்திரனார் பாட்டு. வெளிமானிடம் பரிசுபெற வேண்டிச் சென்றார்; அவனோ இறந்து பட்டான் என்ற செய்தியைக் கேட்டார். அப்பொழுது, தம் நிலை விளக்கமாக,

மாரி இரவில் மரங்கவிழ் பொழுதின்
ஆரஞர் உற்ற நெஞ்சமொ டோராங்குக்
கண்ணின் ஊமன் கடற்பட் டாங்கு
(புறம்.238)

என்பது அவ்வுவமை

தொல்காப்பியமும் கடைச்சங்க இலக்கியங்களும் : காலம், மொழி, உறவு

· பேரா. ப.மருதநாயகம்
ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு
செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை – 600 113. கைபேசி: 94427 87727

தொல்காப்பியம், கடைச்சங்க இலக்கியங்களுக்குக் காலத்தால் முற்பட்டதென்பதைத் தொல்காப்பிய உரையாசிரியர்களின் கூற்றுகள் சில உறுதி செய்யும். "கடைச்சங்கத்தார் செய்யுளுள் பயின்று வாரா இலக்கியத்திறன்கள் சில தலைசசங்கத்தார், இடைச்சங்கத்தார் காலத்தே பயின்று வந்திருக்க வேண்டும்" என்பார் பேராசிரியர். தொல்காப்பிய மரபே தமிழ் மரபு என்பதை அவர், 'தமிழ்நாட்டு மரபு', 'தமிழ்நாட்டார் வழங்கும் மரபுப் பகுதி' என்றெல்லாம் வலியுறுத்துவார்.

பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல்லொடு அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பின்
நாற்பேரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்
(செய்யு.,78)

மரபே தானும்
நாற்சொல் இயலான் யாப்புவழிப் பட்டன்று.
(மேலது,79)

எனும் நூற்பாக்களுக்கு உரைவரையுமபோது, மற்று, **'பாட்டு உரைநூலே' என எழுவகை வகுத்த பகுதியையும் செய்யுட்கு மரபென மேற் கூறினான்; அதனாலே இவ்வேழு வகையானன்றி ஆரியர் வேண்டு மாற்றானும் பிறபாடை மாக்கள் வேண்டும் கட்டளையானும் தமிழ்ச் செய்யுள் செய்தல் மரபன்று என்றவாறு,**

என்று அறிவுறுத்துவார இதனால் தமிழ நூல் மரபே தொலகாப்பிய அடிப்படை என்பதை நனகு உணரலாம்.

சங்கச் சான்றோா செய்யுளகத்தும் முன்னைய ஆசிரியா்களின் இலக்கண நூல்களிலும் காணப்படாதனவற்றை ஒருவன் செய்யுமாயின், ‘தமிழ் வழக்கமாகிய மரபினொடும் தமிழ் நூலொடும் மாறுபட நூல் செய்தானாகும்’ என்று கண்டிப்பது பேராசிரியர் வழக்கம். சில இலக்கணக் கூறுகள் பலமொழிகட்குப பொதுவானவையாக இருப்பினும் அத்தகையவற்றிற்கும் தமிழ்மொழி வழக்காற்றை நோக்கியே இலக்கணம் கூறப்படல் வேண்டும் என்று வறபுறுத்த, “பிறபாடைக்கும் பொதுவாயின் அவையும் தமிழ் வழக்கு நோக்கியே இலக்கணம் செய்யபபடுமாகலானும்” என்பார்.

தொல்காப்பியக் காலத்தில் வழக்கிலிருந்து கடைச்சங்க காலத்தில் வழக்கிறந்த சொற்களையும் உரையாசிரியர்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டுவர்.

மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்ப.ஃ. தென்ப
புகர்அறக் கிளந்த அ.ஃ.றிணை மேன
(மொழிமரபு,49)

எனும் எழுத்ததிகார நூற்பாவிற்கு உரைவரையும் இடைக்கால உரையாசிரியர்கள்,

மரன், குளன், அகன் போன்ற னகர ஈற்றுச்சொற்கள் மரம், குளம், அகம் என உறழ்ச்சியால் வரும். ஆனால், உகின், செகின், விழன், பயின், அழன், புழன், குயின், கடான், வயான் என்னும் ஒன்பது னகரத் தொடர் மொழிகள் மகரத்தொடர் மொழியாக மயங்குவதில்லை என்று சான்றுகள் தருவர் இவற்றுள் அழன், புழன் போன்றவை கடைச்சங்க காலத்திலேயே வழக்கொழிந்தன

சுட்டு முதல் ஆகிய இகர இறுதியும்
எகரமுதல் வினாவின் இகர இறுதியும்
சுட்டுச் சினைநீடிய ஐஎன் இறுதியும்

யாஎன் வினாவின் ஐஎன் இறுதியும்
வல்லெழுத்து மிகுநவும் உறழ் ஆகுநவும்
சொல்லிய மருங்கின் உளஎன மொழிப.
(தொகைமரபு, நூ.17)

எனும் நூற்பாவிற்கு உரைவரைவோர், வல்லெழுத்து மிகுகு வருதலுக்கு,

அதோளிக் கொண்டான்; இதோளிக் கொண்டான்; உதோளிக் கொண்டான்; எதோளிக் கொண்டான் எனும் எடுத்துக்காட்டுகளைத் தருவர். அதோளி, இதோளி, உதோளி, எதோளி போன்ற இகர ஈற்றுச் சொற்கள் கடைச்சசங்க இலக்கியங்களில் இடம்பெறவில்லை.

தொல்காப்பிய மரபே தமிழ் மரபு என்பதற்கும் தமிழ் மரபே தொல்காப்பிய மரபு என்பதற்கும் சிவஞான முனிவர் தரும் சான்றுகள் போதுமானவை.

தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும் குறியீடுகளும் வினைத்தொகை முதலிய சொல்லிலக்கணங்களும், உயர்திணை, அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும் குறிஞ்சி, வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அகம், புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியில் பெறப்படாமையானும் இவையெல்லாம் தாமே படைத்துக் கொண்டு செய்தார் எனின் முந்துநூல் கண்டு என்பதனோடு முரணுதலானும் முற்காலத்து முதனூல் அகத்தியம் என்பதும் அதன் வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூல் என்பதும் துணியப்படும் என்க என்பது அவர் கருத்து.

அறிஞர் தெ.பொ.மீனாட்சிசுந்தரம் தமது 'The Theory of Poetry in Tolkappiyam' (தொல்காப்பியததில் கவிதை இயல்) எனும் ஆங்கிலக் கட்டுரையில் தொல்காபபியத்திற்கும கடைச்சங்க இலக்கியங்களுககும மொழி நிலையில் ஏறபட்டுள்ள மாறுபாடுகளைக்

கணககில் எடுத்துக் கொணடு ஆய்வு செயது, தொல்காப்பியம் கடைச்சங்க இலக்கியஙகளுக்கு முன தோன்றியது என்று முடிவு செய்வார்.

சங்க இலக்கியம் தோன்றிய காலத்தில் தொல்காப்பியர் கூறும் விதிகளில் பல, உரையாசிரியர்கள் கூறுவது போல் வலுவிழந்து விட்டன. சங்க இலக்கியத்திற்கு ஒரு சில நூற்றாண்டுகள் முந்தைய தமிழகத்தைத்தான் தொல்காப்பியம் காட்டுகிறது என்றும், **எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் மூன்றாம் சங்கத்தைச் சார்ந்தவை என்பதும் தொல்காப்பியம் இரண்டாம் சங்கத்து இலக்கணநூல் என்பதும் மரபுவழி நம்பிக்கை** என்றும் அவர் தம்கருத்தைப் புலப்படுத்தக் காணலாம்.

தனிநாயக அடிகளார் தமது 'Tolkappiyam : The Earliest Record' (தொல்காப்பியம் : எல்லாவற்றிற்கும் முந்திய காலத்துப்பதிவு) எனும் கட்டுரையில் ஆணித்தரமாகக்கூறும் விளக்கங்கள் வருமாறு:

நமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் நூல்களில் மிகப்பழமையானது தொல்காப்பியம். அது கி.மு. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில் எழுதப் பெற்றிருக்க வேண்டும். தொல்காப்பியம் குறிப்பிடும் சில இலக்கிய வகைகள் சங்க காலத்தில் காணப்படவில்லை; இடைக்கால உரையாசிரியர்கள் அவை பற்றியத் தெளிவான விளக்கங்களைத் தர இயலவில்லை. எனவே, அவை தொல்காப்பியர் காலத்திற்குமுன் வழக்கில் இருந்திருக்க வேண்டும். தொல்காப்பிய மரபியலில் பயின்று வரும் சிலசொற்கள், தொடர்கள், பழக்கவழக்கங்கள் பின்னால் வந்த சங்க இலக்கியங்களில் குறிக்கப் பெறவில்லை. அவருடைய தலைமுறையினர்க்கே அவை விளக்கம் தர வேண்டிய நிலையில் இருந்தன.

சில இலக்கணக கூறுகளிலும், யாப்பு வகைகளிலும், இலக்கிய வகைமைகளிலும் தொலகாப்டியக் கருத்துகளிலிருந்து சஙக இலக்கியஙகள மாறுபடுகின்றன

தொல்காபபியத்தின் பெரும்பகுதி சஙக இலக்கியத்திற்கு முந்திய காலத்தைச் சோந்ததெனக் கொண்டால்தான் பொருள் தெளிவு கிடைக்கும்.

'ஆனால சங்க காலத்திற்குப் பின்னதெனக் கொண்டால்' அது பெரும் புதிராகவே தோனறும்.

("Most of the Tolkappiayam is very intelligible when considered as Pre – Cankam, but most of it hardly makes sense when considered as Post – Cankam".)

'பழந்தமிழ் இலக்கியத்தில் தொல்காப்பியத்தின் இடம்' ('The place of Tolkappiyam in Ancient Tamil Literature') எனும் கட்டுரையில் எச்.எஸ்.டேவிட் அடிகளார் (Rev.Fr.H.S.David) தொல்காப்பியம், கடைச்சங்க இலக்கியங்களுக்கு முந்தியது எனும் கருத்தை வலியுறுத்த அடுக்கும் சான்றுகள் பல.

தொல்காப்பிய எழுத்ததிகாரம் நமக்குக் கிடைத்துள்ள எல்லாச் சங்க இலக்கியங்களுக்கும் முந்தியது என்பதை அதன் நூற்பாக்கள் சில தெளிவாக்குகின்றன. குறுந்தொகை, தொல்காப்பியத்திற்குக் காலத்தால் நெருக்கமானதாக இருக்கலாம். ஆனால், எழுத்ததிகார நூற்பாக்கள் பல குறுந்தொகைக்கும் முந்தியவை.

நூற்பா 29: மொழிமரபு :

சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே

அஐ ஔஎனும் மூன்று அலங்கடையே.

(மொழிமுதலில் சகரம் அ, ஐ, ஔ எனும் மூன்று உயிரெழுத்துகள் தவிர ஏனையவற்றோடு சேர்ந்துவரும். க, த, ந, ப, ம எனும் ஐந்தெழுத்துகளும் எல்லா உயிரொடும் சேர்ந்து மொழிமுதலில் இடம்பெறும்.)

சகரத்தை முதலாக உடைய சொறகள நூற்றுக்கணக்கில் பின்னால் வந்து சேர்ந்தன. ஆனால் கடைசசங்க இலக்கியங்களில் சிலவறறையே காணமுடியும

'சகடம்' என்ற சொல் குறுந்தொகையில் (165) ஓரிடத்தில மட்டுமே வரும். அஃதொன்றே சகரத்தில தொடங்குவது.பரிபாடலில் (10.17) பதினொரு சொற்கள் பதினைந்து இடங்களில் வருகின்றன.

நூற்பா 31: மொழிமரபு :

ஆ எ ஒ

என்னும் மூவுயிர் ஞகாரத்து உரிய.

(ஞகரமானது ஆ, எ, ஒ எனும் உயிர்களோடு சேர்ந்து மொழி முதலில் வரும்)

குறுந்தொகையில், 'ஞமலி' ஓரிடத்தில் மட்டுமே வருகிறது. இடைக்காலத் தமிழிலும் பிறகும் ஏழு உயிர்களோடு ஞகரம் சேர்ந்து வருகிறது. எனவே, எழுத்ததிகாரம் சங்க இலக்கியங்களுக்கு ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முந்தியதாக இருக்க வேண்டும்.

நூற்பா 32: மொழிமரபு :

ஆவொடு அல்லது யகரம் முதலாது

(யகரம் ஆகாரத்தோடு மட்டுமே மொழி முதலில் வரும்)

எடுத்துக்காட்டு : யான், யாங்கு, யாவன், யாங்கணம், யாங்கன், யாது, யாவது, யாவன், யாவள், யாவர் போன்றவை, எங்கு, எவன், எங்கணம், எங்கன், எது, எவது, எவன், எவள், எவர் என்று குறுகின. 'யவனர்' என்ற சொல் மட்டுமே முதலில் பயன்படுத்தப்பட்டது. புறநானூறு, நெடுநல்வாடை, பெரும்பாணாற்றுபபடை, முல்லைப்பாட்டு, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் இச்சொல்லாடசி இடம்பெறுகிறது.

பின்னாட்களில் வந்த சொற்கள்:

யமதூதர், யமன், யவனச் செப்பு, யமகம், யூபம், யூகம். மேறகூட்டிய மூன்று நூற்பாக்கள் கூறும் விதிகள் மீறப்பட்ட நிலைகளை ஆராயும் போது கடைச்சங்க இலக்கியங்கள் தொல்காப்பியத்திற்குப் பிற்படடவை எனபதை அறியலாம்.

குறுந்தொகை போன்ற முற்சங்க இலககியங்கள் கி.மு.324-ஆம் ஆண்டிற்கு முன் தோன்றியிருக்க வேண்டும். அகநானூற்றிலும் குறுந்தொகையிலும் நந்த மன்னர்கள் சுட்டப்படுகின்றனர்; அவர்களது தலைநகரான பாடலிபுத்ரமும் குறிக்கப்படுகிறது. நந்தர்களைவிடப் பெருஞ்செல்வராக வாழ்ந்த மௌரிய மன்னர்கள் (சந்திரகுப்தர், அசோகர் போன்றவர்கள்) இந்நூல்களின் இடம் பெறவில்லை. சந்திரகுப்த மௌரியன் அரியணை ஏறிய ஆண்டு கி.மு.321 ஆகும். எனவே, கடைச்சங்க இலக்கியங்களுக்கு முந்தியத் தொல்காப்பியம் கி.மு 400-இல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

'தமிழும் தொல்காப்பியமும்' எனும் கட்டுரையில் தொல்காப்பியர் வாய்மொழியினை அவ்வாறே எடுத்தாண்ட பகுதிகள் திருக்குறளில் காணப்படுவதைப் பேராசிரியர் க.வெள்ளைவாரணன் பட்டியலிட்டுள்ளார்.

தொல்காப்பியம் : எழுத்தெனப்படுப
அகரமுதல னகர இறுவாய் (நூன்மரபு,1)

திருக்குறள் : அகரமுதல எழுத்தெல்லாம் (1)

ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். (1330)

தொல்காப்பியம் :

நிலம் தீ நீர் வளி விசும் போடைந்தும்
கலந்த மயக்கம் (மரபியல், 90)

திருக்குறள்

சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு (27)

தொல்காப்பியம் :

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப
(செய்யுளியல், 176)

திருக்குறள்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (28)

தொல்காப்பியம் :

அருள் முந்துறுத்த அன்பு பொதி கிளவி
(கற்பியல், 20)

திருக்குறள் :

அருளென்னும் அன்பீன் குழவி (757)

தொல்காப்பியம் கடைச்சங்க இலக்கியத்திற்கும் திருக்குறளுக்கும் பன்னூறாண்டுகள் முற்பட்டதெனக் கூறும் அறிஞர் வ.சுப.மாணிக்கம் அதை நிறுவுதற்குப் பல அரிய செய்திகளை முன் வைப்பார்.

தொல்காப்பியர் காலத்தில், 'கள்' என்னும் பன்மை விகுதி அஃறிணையில் மட்டுமே வழங்கியது.

கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள் வழியுடைய பலவறி சொற்கே.
(பெயரியல்,15)

ஆனால், இதற்கு மாறாகக் குறட்பாக்களில உயர்திணையில் 'கள்' விகுதி வரக்காணலாம்.

வரைவுஇலா மாண்இழையார் மென்தோள் புரைஇலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. (919)
துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம். (263)

தொல்காப்பியத்தில் இல்லாத புதுவழககுகள் சில சங்கச் சான்றோர் பாடல்களிலும திருக்குறளிலும் இடம பெறுகின்றன.

எடுத்துக்காட்டு : ஆல், ஏல், மல், மை, பாக்கு என்னும் இறுதியையுடைய வினையெச்சங்கள்.

தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீ மடுத்துக்
கூறாமல் குறித்ததன் மேல் செல்லும் கடும் கூளி.
(கலித்தொகை, 1:2,3)

பொருள் அல்லால் பொருளும் உண்டோ? என, யாழ நின்
மருளி மடநோக்கம் மயக்கப்பட்டு அயர்த்தாயோ?
(கலித்தொகை,14:10,11)

தேம்கொள் பொருப்பன் சிறுகுடி எம் ஆயர்
வேந்து ஊட்டு அரவத்து நின்பெண்டிர் காணாமல்
காஞ்சித்தாது உக்கன்ன தாது எரு மன்றத்துத்
தூங்கும் குரவையுள் நின் பெண்டிர் கேளாமை
(கலித்தொகை,108:57-60)

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (377)

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம் (386)

சூழாமல் தானே முடிவுஎய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு (1024)

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து (1128)

மாயோன, சேயோன், வருணன், வேந்தன் என்னும் நானிலத் தெய்வங்களுடன் வெற்றி விளைக்கும கொற்றவையையும், எல்லா நிலத்திற்கும் உரிய நிலையில், 'கடவுள்' எனனும் பெயரையும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். சங்கச் செய்யுட்களில் காரியுண்டிக் கடவுள், மணிமிடற்றோன், முக்கணன் என இறைவனை உருவ நிலையில் வைத்து வழிபடும் முறைமை காணப்படுகிறது. திருமால் வழிபாட்டில் செங்கட்காரி (வாசுதேவன்), கருங்கண் வெள்ளை (சங்குருணன்), பொன்கட பச்சை (பிரத்தியும்நன்), பைஙகண்மால் (அநிருந்தன்) ஆகிய நால் வகை வியூகமும் பரிபாடலில் கூறபபட்டுளளன

முனைவர் சோ.ந.கந்தசாமி தமது 'The Age of Tolkappiaym' (தொல்காபபித்தின் காலம்) எனும ஆஙகிலக் கட்டுரையில் சொல்லும் சில கருத்துகள் எண்ணிப்பார்த்தற்குரியவை.

தொல்காப்பியச் செய்யுளியலை ஆழமாக ஆராய்ந்தால் அது கடைச்சங்க இலக்கியங்களுக்குக் காலத்தால் முந்தியது என்பது புலப்படும். 'அம்போதரங்கம்' என்பது கலிப்பாவின் உறுப்பாகச் சொல்லப்படுகிறது. ஆனால், தொல்காப்பியர் இதற்கு முன்னால், 'எண்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்; அதன் பொருள் இளம்பூரணரால் விளக்கப்பட்டுள்ளது. எனவே, 'அம்போதரங்கம்' என்ற வடசொல் இடைச்செருகல் என்பது தெளிவாகிறது. வடமொழி யாப்பிலக்கணத்தில் 'அம்போதரங்கம்' என்ற சொல் இடம்பெறவில்லை. தொல்காப்பியத்தில் புத்த சமயச் சாயல் ஏதுமில்லை. எனவே, புத்தசமயம் தென்னகம் வருவதற்கு முன்பே தொல்காப்பியம் தோன்றியிருக்கவேண்டும். கி.மு.300-இல் அசோகன் தென்னகத்திற்கும் இலங்கைக்கும் புத்த சமயத்தைப் பரப்பத் துறவிகளை அனுப்பினான் என்று இந்திய வரலாற்றாசிரியர் கூறுவர்.

பிரான்சுவா குரோ (Fransois Gros) எனும் பிரெஞ்சுத் திறனாய்வாளர் **'Introducing Tiruvalluvar : The Book of love'** (திருவள்ளுவரை அறிமுகப்படுத்தல் : காமத்துப்பால்), **"Five times five is twenty five: around the Commentaries on the Book of love of Tiruvalluvar"** (ஐந்தைந்து இருபத்தைந்து : திருவள்ளுவரின் காமத்துப்பால் விளககவுரைகளைப்பற்றி) என்னும் இரண்டு கடடுரைகளில் தமிழ் அக இலக்கிய மரபு பற்றியும் ஐந்திணைப்பாகுபாடு பற்றியும் அரிய கருத்துகள் பலவற்றைச் சொல்லிச் செல்கிறார். சங்கச் சான்றோாகளுக்குக் கவிதை யாக்கத்தில் மனச்சாட்சி (Linguistic Conscience)யாய் அமைந்தவர் தொலகாப்பியரே என்று குறிபபிட்டு, ஐந்திணைப்பாகுபாட்டின் அருமையை எடுத்துரைபபாா ஏமீல் (Amiel) எனபார் தமிழ்ததிணைக் கோட்பாடு பற்றிப் பேசுமபோது, 'A Landscape is a state of the soul'

(ஒரு நிலக்காட்சியெனபது ஓர் உள்ளநிலையைச் சுடடும்) என்று வியந்து பாராட்டுவார். இதனைக்குறிப்பிடும் குரோ, திணையென்பது 'ஏமீல பயன்படுத்தும் தொடரின் ஒரு சொல் விளக்கம்' (One-word illustration of Amiel's phrase) என்று தெளிவுபடுத்துவது திணைக்குத் தரப்படும் தக்க வரையறையாகும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணைப்பெயர்கள் ஐவகை நிலங்களுக்கும் உரிய பூக்களைக் குறிக்கும் என்பது இளம்பூரணரின் விளக்கம் இதனை ஏற்றுக்கொள்ளாத நச்சினார்க்கினியர் திணையென்பது ஒழுக்கம் என்று பொருள்படும் என்றும், பொருந்தாவொழுக்கமாகிய ஒருதலைக்காமம் (கைக்கிளை), பொருந்தாக்காமம் (பெருந்திணை) ஆகியவை பற்றிப் பேசுகின்ற இரண்டு திணைகளுக்கும் நிலமில்லை என்றும் புலப்படுத்தக் காணலாம். நச்சினார்க்கினியரின் கூற்றை ஏற்றுக்கொள்ளும் குரோ, திணையென்பது ஒழுக்கம், நடத்தை, உள்ளநிலை என்ற விரிந்த பொருள் கொண்டதென்றும் ஐந்திணைக்கும் உரிய ஐந்து உள்ள நிலைகளே உரிப்பொருள்கள் ('specific material') என்றும் இதை விளக்க நச்சினார்க்கினியர் தரும் உருவகம் ('விளக்கு' என்ற சொல் தானத்தையும் ஒளியையும் குறிப்பதைப் போன்று) மிகப்பொருத்தமானதென்றும் அறிவுறுத்துவார். உரிப்பொருளை 'specific material' என்றும், இடம், பொழுது ஆகிய இரண்டையும் குறிக்கும் முதற்பொருளை 'primordial material' என்றும் பூ, மரம், செடி, கொடி, பறவை, விலங்கு, தெய்வம, தொழில், உணவு போன்றவற்றைச் சுட்டும் கருப்பொருளை 'seminal material' என்றும் அவர் தரும் மொழிபெயர்ப்புகள் சிறப்பானவை.

தொல்காப்பியம் விளக்கும் திணைக்கோட்பாடு எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களிலும் மட்டுமல்லாமல் திருக்குறளிலும் பின்பற்றப்பட்டிருபபதை குரோவின் கட்டுரை ஐயத்திற்கிடமின்றி நிறுவும். எடடுத்தொகை நூல்களில் உள்ள 1859 பாடல்களில் 530 பாலைக்கும, 488 குறிஞ்சிக்கும், 344 நெய்தலுக்கும், 263 மருதத்திற்கும், 234 முல்லைக்கும் உரியவை. ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு திணைக்கும நூறு குறும்பாடல்கள் தரப்பட்டுள்ளன. கலிதொகையோ ஒவ்வொரு

திணைக்கும குறைந்த அளவாக 30 பாடலகளை உரித்தாககும். அகநானூற்றில ஐநதிணைக்குமான பாடல்கள் ஒரு குறிப்பிட்ட வரிசையில் அமைந்துள்ளன.

200 பாலைப்பாடல்கள் - 1,3,5,7,9,11,13,15,17,19....

80 குறிஞ்சிப்பாடல்கள் - 2,8,12,18,22,28,32,38,42,48,52,58....

40 முல்லைப்பாடல்கள்-4,14,24,34,44,54,64,74,84,94,104,114,124....

40 மருதப்பாடல்கள் - 6,16,26,36,46,56,66,76,86,96,106,116,126....

40 நெய்தல் பாடல்கள் - 10,20,30,40,50,60,70,80,90,100,110,120....

நற்றிணை

குறிஞ்சிக்கு 132 பாடல்களையும் பாலைக்கு 106 பாடல்களையும் நெய்தலுக்கு 102 பாடல்களையும், மருதத்திற்கு 32 பாடல்களையும் முல்லைக்கு 28 பாடல்களையும் ஒதுக்குகிறது.

குறுந்தொகை, இம்முறைகளில் எதனையும் பின்பற்றாமல் கூற்றை முன்னிறுத்திப் பாடல்களை வரிசைப்படுத்துகிறது.

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) ஆகிய ஐந்து ஆற்றுப்படைகளைத் தவிர ஏனைய ஐந்தனுள் முல்லைபபாட்டு முல்லைத்திணையையும் குறிஞ்சிப்பாட்டு குறிஞ்சித் திணையையும், பட்டினப்பாலை பாலைத்திணையையும் தலைப்பிலேயேச் சுட்டுவன.

எல்லாவற்றிற்கும் மேலாகச் சங்க அக இலக்கியங்களைப் போலவே, திருக்குறள் காமத்துப்பாலில் வள்ளுவர் ஐந்திணை மரபைப் புறக்கணிக்காது அதன் இனறியமையாக் கூறினுக்குச் சிறப்புரிமை அளிதது வெற்றி பெற்றுள்ளார் என்பதைப் புலப்படுத்தும் கட்டுரை பெரும் பாராடடுக்கு உரியது

காமத்துபபாலின உரைமரபொனறு அதன் இருபத்தைந்து அதிகாரங்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கிறது. முதல ஏழு அதிகாரங்களில் பேசுபவன் தலைவன்; அடுத்து வரும் பன்னிரண்டு அதிகாரங்களில் பேசுபவள தலைவி; இறுதி ஆறு அதிகாரங்களில்

இருவரும் பேசுகின்றனர். இப்பாகுபாட்டைத் திருவள்ளுவ மாலையில் உள்ள மோசிகீரனார் பாடலிலும், காளிங்கரின் உரையிலும் தஞ்சையில் கிடைத்த ஆசிரியர் பெயர்தெரியாத ஒரு பாடலிலும் பார்க்கலாம். குரோ, இப்பாகுபாட்டில் இருக்கும் குறைகளைச் சுட்டிக்காட்டுகிறார். முதல் நான்கு அதிகாரங்களில் பேசுபவன் தலைவன் என்றும் ஏழு முதல் பத்தொன்பது வரையிலான அதிகாரங்களில் பேசுபவள் பெரும்பாலும் தலைவியென்றும் ஏற்றுக் கொள்ளலாமாயினும் பிற அதிகாரங்களில் உள்ள குறள்களுக்கு இப்பாகுபாடு பொருந்தவில்லை. ஏழாம் அதிகாரத்தில் யார்குரல் ஒலிக்கிறது என்பதை உறுதியாகச் சொல்ல இயலாது.

பரிமேலழகர் முதல் ஏழு அதிகாரங்களைக் களவு என்றும் பதின்மூன்று முதல் இருபத்தைந்து வரை உள்ள அதிகாரங்களைக் கற்பு என்றும் பகுப்பார். பரிப்பெருமாளும் மணக்குடவரும் காமத்துப்பாலைக் கீழ்க்கண்ட மூன்று பகுதிகளாகப் பிரிப்பர் :

1) முதல் மூன்று அதிகாரங்களில் தலைவனும் தலைவியும் புணர்ச்சியால் விளையும் இன்பத்தைத் துய்த்தல்.

2) நான்கு முதல் இருபத்தோரு அதிகாரங்கள் வரை, பிரிவிற்குப்பின் கூட்டம் பற்றி இரங்கல்.

3) இருபத்தியிரண்டு முதல் இருபத்தியைந்து வரை, ஊடலுக்குப் பின் நிகழும் கூட்டத்தால் பெறும் இன்ப நுகர்ச்சி.

மணக்குடவர் தமது உரையில் இருபத்தைந்து அதிகாரங்களையும் ஐந்தைந்தாகப் பிரித்து ஐந்திணைகளின் உரிபொருள்களோடு இணைத்துப் பேசுவார்

1) **குறிஞ்சி** . மலையும் மலை சார்ந்த இடமும் - புணர்ச்சி – முதல் ஐந்து அதிகாரங்கள்.

2) **பாலை** தனிநிலம் இல்லை – பிரிவு – ஆறு முதல் பத்து வரையிலான ஐந்து அதிகாரங்கள்

3) **முல்லை** : காடும் காடு சார்ந்த இடமும் - இருத்தல் - பதினொன்று முதல் பதினைந்து வரையிலான ஐந்து அதிகாரங்கள். முல்லை நிலத்துக்குரிய சிறுபொழுதாகிய மாலையும் இசைக்கருவியாகிய் குழலும் ஒரு குறளில் இடம் பெறக் காணலாம்.

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை (1228)

4) **நெய்தல்** : கடல் சாாந்த இடம் - இரங்கல் - பதினாறு முதல் இருபது வரையிலான ஐந்து அதிகாரங்கள். பதினாறாம் அதிகாரத்தில் தலைவியின் உடல்நலிதலும் பத்தொன்பதாம் அதிகாரத்தில் பிரிந்த தலைவனை எண்ணி ஏங்கி அவள் அன்பை வெளிப்படுத்தலும் பேசப்படுகின்றன.

5) **மருதம்** : வயலும் வயல் சார்ந்த இடமும் - ஊடல் இருபத்தொன்று முதல் இருபத்தைந்து வரையிலான ஐந்து அதிகாரங்கள்.

காமத்துப்பாலைக் களவு, கற்பு என்று இரு பகுதிகளாகப் பிரிக்காமல், ஐந்திணை அடிப்படையில் ஐந்து பகுதிகளாகப் பிரித்தமைக்குப் பிரெஞ்சுக் கல்வியாளர் கூறும் காரணங்கள் மூன்று.

1) சங்க அக இலக்கியத்தை எண்ணும் போது முதலில் நம் அறிவிற்குப் புலப்படுவது ஐந்திணைப் பாகுபாடே.

2) சங்க அக இலகககியங்கள் யாவற்றிலும் பெரும்பாலும் காணப்படுவது ஐந்திணைப் பாகுபாடே.

3) திருக்குறளின காமத்துப் பாலையும் இவ்வாறு பிரிப்பது பரிமேலழகருக்கு முனனிருந்த பழமையான மரபு என்பதற்கான தடயங்கள் கிடைக்கின்றன

முந்தைய இலக்கியஙகளில பரவலாகக் காணப்படாத, தமிழ் அக இலக்கிய மரபிற்கே உரியதான மடலேறுதலைக் காமத்துப்பாலின் ஆறாம் அதிகாரத்தில் வளளுவா பயன்படுத்திக் கொண்டுள்ள சிறப்பையும் குரோ விளக்குவார். மடலேறுதலின் கொடுமையை

எண்ணித் தலைவனைக் கண்டித்தல் முறையாகாது. அவன் மடலேறுதலைப் பற்றிப் பேசுவதெல்லாம் காதல் மிகுதியாலும் தலைவியைத் திருமணம செய்து கொண்டு ஊராரின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற விளைவாலுமே ஆகும்.

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல்அல்லது இல்லை வலி (1131)

நாணொடு நல்லாண்மை பண்டுஉடையேன் இன்றுஉடையேன்
காமுற்றார் ஏறும் மடல் (1133)

இக்குறள் இரண்டும் குரோவின் கருத்திற்கு அரண் சேர்ப்பவை.

மடலேறுதல் பற்றித் தொல்காப்பியம் :

ஏறிய மடல்திறம், இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே
(அகத்திணையியல், 51)

பிராகிருதத்திலும், வடமொழியிலும் உள்ள காமநூல்களோடு சங்க அக இலக்கியங்களையும் காமத்துப் பாலையும் ஒப்பிடும் குரோ, தொல்காப்பிய, சங்க அக இலக்கிய மரபின் தனிச்சிறப்பைப் புலப்படுத்துவார். வடமொழிக் காமநூல்களின் விரசமான, ஆபாசமான கூறுகளையும் கீழ்த்தரமான உத்திகளையும் தமிழ்மரபு முற்றுமாகப் புறக்கணித்திருப்பது அவரால் பெரிதும் பாராட்டப்படுகிறது

காமுகர்களின் விரசமான விளையாட்டுகளுக்குச் சங்க அக இலக்கிய மரபில் இடமில்லை. கடித்தல், நகக்கீறல், வசிய மருந்துகள், காமத்தைத் தூண்டும் அணிகள், உடலுறவுக்குத் துணைசெய்யும் பொருள்கள் முற்றுமாக ஒதுக்கப்படுகின்றன. வடநூலார் விரும்பிப் பேசும் மாற்று நிலைகள் (ஆண் உடலின் மேல் பெண் உடல்)

புறக்கணிக்கப்படுகின்றன. வடமொழிக் காம நூல்களில் காணப்படும் வெற்றிலை மெல்லுதல், பிற பாலுறவுக் காட்சிகள் ஏதும் இங்கில்லை.

சங்க அக இலக்கியங்களும், காமத்துப்பாலும் தொல்காப்பிய ஐந்திணைக் கோட்பாட்டு அடிபபடையில் அமைகின்றன என்பதை அவர்தரும் விளக்கங்கள் தெளிவாக்கும்.

தொல்காப்பியப் பொருளதிகார மரபியலில்,

புல்லும் மரனும் ஓர் அறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (28)

நந்தும் முரளும் ஈர் அறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (29)

சிதலும் எறும்பும் மூஅறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (30)

நண்டும் தும்பியும் நான்கு அறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (31)

மாவும் மாக்களும் ஐஅறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (32)

மக்கள் தாமே ஆறு அறிவு உயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (33)
ஒருசார் விலங்கும் உளஎன மொழிப (34)

எனும் நூற்பாக்கள் இடம்பெறுகின்றன. இவற்றிறகு உரைவரையும் இளம்பூரணர், 'கிளி, குரங்கு, யானை போன்றவை ஆறறிவு உயிர்கள்' என்றும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும், 'விலஙகுகளிலும் குரங்கு போன்ற உணர்வுடையவை இருக்குமானால் அவையும் ஆறறிவு உள்ளவையாகக் கருதபபெறும்' என்றும் சான்றுகள் தருவர்.

இச்சான்றுகள், அவர்களுக்குக் கடைசசங்க இலக்கியங்களிலிருந்து கிடைத்தவையே.

குரங்குகளுக்கு மாந்தரையொத்த அறிவாற்றலும் உணர்வுகளும் உண்டென்பதற்குக் குறுந்தொகையிலும், நற்றிணையிலும், பெரும்பாணாற்றுப்படையிலும் வரும் பாடல்களில் படம்பிடிக்கப் பெறும் நிகழ்ச்சிகளால் அறியலாம்.

ஆண்குரங்கு இறந்ததால் கைம்மையை விரும்பாத பெண்குரங்கு தனது குட்டியைச் சுற்றத்தினிடத்துக் கையடையாக ஒப்புவித்து ஓங்கிய மலைப்பக்கத்தில் தாவி உயிரை மாய்த்துக் கொள்ளும் காட்சியைக் குறுந்தொகைப் பாடல் ஒன்று சொல்லோவியமாக்குகிறது.

கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துஉயிர் செகுக்கும்
சாரல் நாட! நடுநாள்
வாரல் வாழியோ! வருந்துதும் யாமே!. (69)

தனது சுற்றத்திற்கு அஞ்சி அது அறியாமல் மிளகு மிகுந்த மலைச்சாரலில் செம்முக மந்தி ஒன்று ஆண்குரங்கோடு களவுப் புணர்ச்சியால் இன்பம் துய்த்துப் பின் வேங்கை மரத்து மீதேறிக் கீழேயிருந்த சுனைநீரில் தன்முகத்தைப் பார்த்துக் கலைந்து கிடந்த தன் தலைமுடியைத் திருத்தும் காட்சியை இளநாகனார் அழகிய பாடலாக்குகிறார.

கடுவன்

முறிஆர் பெருங்கிளை அறிதல் அஞ்சி
கறிவளர் அடுக்கத்துக் களவினில் புணர்ந்த
செம்முக மந்தி செய்குறி கருங்கால்

பொன் இணர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇயர்
குண்டுநீர் நெடுஞ்சுனை நோக்கிக் கவிழ்ந்து தன்
புன்தலைப் பாறு மயிர்திருத்தும்
குன்ற நாடன் இரவி னானே (நற்றிணை, 151)

ஆறாவது அறிவைப் பெற்றிருக்கக் கூடிய விலங்குகளில் யானை சிறப்பிடம் பெறுகிறது தொல்காப்பியரின் பெயர்ப்பட்டியல், 'களிறு' எனும் சொல்லோடு தொடங்குவதால் அந்நூற்பாவிற்கு உரைவரையும் பேராசிரியர், 'விலங்குகளில் தலையாயது யானையாதலின் அது முதலிடம் பெறுகிறது' என்பார். சங்கச் சான்றோர் பாடல்களிலிருந்து ஒவ்வொரு யானைக் கூட்டத்திற்கும் ஏந்தல் அல்லது யூதநாதன் என்று அழைக்கபபெறும் தலைமைதாங்கும் வலிய களிறு உண்டென்றும் அது அக்கூட்டத்திற்கு முன் செல்லுமென்றும் அக்கூட்டத்திற்கு உணவு பெறறுக் கொடுத்துக் காக்கும் கடமையும் அதற்கு உண்டென்றும் அறிகிறோம்.

சோலையிலுள்ள வாழையின் சுருண்ட குருத்து மத்தகத்தைத் தேய்த்தலால் வருந்திய களிற்றின் முதுகைத்தடவி ஆறுதல் கூறும் பிடியும் கவிஞர் கண்களிலிருந்து தப்பவில்லை.

சோலை வாழைச் சுரி நுகும்பு இனைய
அணங்குடை இருந்தலை நீவலின் மதன் அழிந்து
மயங்குதுயர் உற்ற மையல் வேழம்
உயங்குயிர் மடப்பிடி உலைபுரம் தைவர
ஆம் இழி சிலம்பின் அரிது கண் படுக்கும்
மாமலை நாடன் கேண்மை
காமம் தருவதோர் கைதாழ்ந் தன்றே.
(குறுந்தொகை, 308)

வாழையால புணபடட களிற்றையும் அதனை ஆற்றும் பிடியையும் அகநானூற்றுப் பாடலும் காட்டுகின்றது.

வாழை யோங்கிய தாழ்கண் ணசும்பில்
படுகடுங்களிற்றின் வருத்தம் சொலியப்
பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்
(அகநானூறு, 8:9-11)

கன்று ஈன்ற தன் பிடிக்கு உணவூட்ட விரும்பி ஒரு களிறு தினைத்தாள்களைத் திருடிச் செல்வதைக் கோவூர்கிழார் நகையுணர்வோடு எடுத்துரைப்பார்

நெடுங்கழை நிவந்த நிழல்படு சிலம்பின்
கடுஞ்சூல் வயப்பிடி கன்று ஈன்று உயங்க
பால் ஆர் பசும் புனிறு தீரிய களி சிறந்து
வாலா வேழம் வணர் குரல் கவர்தலின்
(நற்றிணை, 393)

இளம்பூரணர் ஆறறிவு பெற்ற உயிர்களில் களிற்றோடும் குரங்கோடும் கிளியையும் சேர்ப்பார். குறிஞ்சித்திணைப் பாடல்களில் தினைப்புனம் காக்கும் தலைவியும தோழியும் கிளியை விரட்டும் காட்சிகள் அளவற்ற முருகியல் இன்பம் தரும் வண்ணம் படைக்கப்பட்டுள்ளன. ஐங்குறுநூற்றின் குறிஞ்சித் திணைப்பகுதியில் கபிலரின், 'கிள்ளைப்பத்து' தலைவி கிளி கடிதலைப் பின்புலமாகக் கொண்டுள்ளது. இசையாலும் இனிய ஒலிகளாலும் கிளிகள் மயங்குவதைக் கூறும் பாடல்களைக் குறுந்தொகையிலும் திணைமாலை நூற்றைம்பதிலும் காணலாம். தினைப்புனத்தில் கிளிகளை ஓட்டும் பெண்கள் குளிர் எனும மூங்கிலால் ஆன கருவியைக் கையாளுவர் தலைவியின் பாட்டினால் கவரப்பட்டு அதனை விரும்பிவரும் கிளிகள் குளிரின் ஒலியையும் அவள் பாட்டென மயங்கினவாம்.

சுடுபுன மருங்கில் கலித்த ஏனல்
படுகிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே
இசையின் இசையா இன்பாணித்தே
கிளியவள் விளியென விழல் ஒல்லாவே...
(குறுந்தொகை, 291)

கிளிகள் திணைப்புனத்தில தம் இனிய குரலில் ஒன்றையொன்று அழைத்துப்பேசிக் களிபபதையும் மாறோககத்து நப்பசலையார் ஒரு தலைவியின் கூற்றில் தருகிறார்.

வாரல் மென்தினைப் புலர்வுக் குரல் மாந்தி
சாரல் வரைய கிளை உடன் குழீஇ
வளி எறி வயிரின் கிளி விளி பயிற்றும்
நளி இருஞ் சிலம்பின் நல்மலை நாடன்.
(நற்றிணை, 304)

உயிரியல், விலங்கியல், உளவியல் போன்ற அறிவியல் துறைகளைச் சார்ந்த அறிஞர்களும் இலக்கியப் படைப்பாளர்களும் 2007-இல் இங்கிலாந்தில் நடந்த கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டபோது, இன்றைய அறிவியல் இன்னும் விலங்குகளை முற்றுமாகப் புரிந்து கொள்ளவில்லையென்றும், விலங்குகளின் அறிவாற்றலையும் உணர்வுகளையும் பற்றி இதுவரை நிகழ்ந்துள்ள அறிவியல் ஆய்வுகள் போதுமானவை அல்லவென்றும், அறிவியல் ஆய்வுகளோடு அன்றாட நிகழ்வுகள் மூலமாகப் பெறப்படும் விலங்குகளைப் பற்றிய பட்டறிவும் நமக்குப் பெருந்துணையாகும் என்றும் சான்றுகளோடு நிறுவியுள்ளனர். ஆனால், நம் தமிழ் மூதாதையர் தொல்காப்பியர் காலத்திற்கும் முன்னதாகவே விலங்குகளையும் பறவைகளையும் பற்றித் தெளிந்த அறிவு பெற்றிருந்ததோடு, அவற்றை ஐந்திணைகளிலும் கருப்பொருள்களாகச் சோத்துக் கொண்டு, அவற்றுள் சில மாந்தரையொத்து ஆறறிவு பெற்றவையாய் இருக்கக் கூடும் என்ற துணிச்சலான முடிவுக்கும் வந்தனர். இதனைத் தொல்காப்பிய மரபியல் நூற்பாக்களும் சங்கப்புலவர் பாடலகளும் ஐயததிற்கிடமினறிப் பதிவு செய்துள்ளன.

தமது தமிழ இலக்கிய வரலாற்றில முக்கழகமும் நிறுவியவர் பாண்டியரே என்று கூறும் ஞா.தேவநேயப்பாவாணர் இறையனார் அகப்பொருளுரை தரும் முச்சங்க வரலாறறில் சொல்லப்படும் செயதிகளில் பல ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை என்பார். தலைக்கழகம் இருந்தகாலம் கி.மு 10,000 முதல் கி மு 5000

வரையென்றும், தலைக்கழகக் காலத்துப் பாண்டிநாடு குமரிமுனைக்குத் தெற்கில் ஏறத்தாழ ஈராயிரங்கல் தொலைவு பரந்திருந்ததனால் அக்கழகப்புலவர் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்பதிலும் அவருள்ளிட்டுப் பாடினார் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் என்பதிலும் இம்மியும் ஐயுறவிற்கு இடமில்லையென்றும், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள், குன்றெறிந்த முருகவேள் என்பவை புலவர்களின் பெயர்களே என்றும் கருத்தறிவிப்பார். 'அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்து' என்று இறையனார் களவியல் உரை குறிப்பிடுவதால் தலைக்கழகத் தோற்றத்திற்கு முன்பே நல்லிசைப்புலவர் பலர் செய்யுள் செய்திருந்தனரென்றும் அவற்றை ஆராய்வதே கழகத்தின் முதல் நோக்கமும் முதன்மையான நோக்கமும் ஆகும் என்றும் பாவாணர் கூறுவது ஏற்றுக்கொள்ளற்குரியது.

இடைக்கழகம் பற்றிப் பாவாணரின் முடிவுகள்:

இடைக்கழகத்தைப புரந்த பாண்டியர் வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் வரை ஐம்பத்தொன்பதின்மர், தலைக்கு நாற்பதாண்டு நிரவலாக வைத்துக் கொள்ளின் அவர் ஆண்டகாலம் ஈராயிரத்து முந்நூற்று அறுபதாண்டாகும். முக்கழக வரலாற்றில் அது மூவாயிரத்து எழுநூறாண்டு என்றது கழகமில்லாத இடைக்காலத்தையும் சேர்ந்ததாகல் வேண்டும்.

வெண்டேர்ச்செழியன், முடத்திருமாறன் என்னும் பெயர்கள் பிற்காலத்துப் பாண்டியர் பெயர்போலாது தூய தமிழாய் இருத்தல், ஆரியர் வருகைக்கு முந்திய நிலையைக் காட்டும்

இடைக்கழக இருக்கையைக் கொண்டது இரண்டாம் அல்லது மூன்றாம் கடல்கோள. அது கி.மு.1500 காலகட்டங்களில் நிகழ்ந்திருக்க வேண்டும். ஏறத்தாழ அதுவே கீழை ஆரியர் இந்தியாவிற்குள் புகுந்த காலமும். **முதலிரு கழகமும் முற்றும் ஆரியத் தொடர்பற்றன (பக். 106-108.)** ஆனால், இறையனார் களவியலுரை கூறும் சில செய்திகள் தவறானவையென்றும், சில நம்பத்தக்கவை அல்லவென்றும் சில சிறு திருத்தங்களுக்கு உரியவையென்றும் அவர் சுட்டிக்காட்டினார். அகத்தியர் தென்னாடு

வந்தது கி.மு.12-ஆம் நூற்றாண்டென்பதும், அதற்குள் முதலிரு கழக இருக்கைகளும் மூழ்கிவிட்டன எனபதும், தொல்காப்பியர் காலம் கி.மு.6 அல்லது 7-ஆம் நூற்றாண்டென்பதும், அகத்தியரும் தொல்காப்பியரும் ஒருகால வாணராகவோ இடைக்கழகப் புலவராகவோ இருந்திருக்க முடியாதென்பதும், முதலிரு கழக இலக்கியங்கள் யாவையும் நூற்பெயரும் நூலாசிரியர் பெயரும் எவருக்கும் எதிர்காலத்தில் தெரியாதவாறு கூட்டுக்கட்டுப்பாட்டுடன் அழிக்கப்பட்டு விட்டன எனபதும அவருடைய ஆய்வு முடிவுகள். ஆயினும் தொல்காப்பியத்தில் வெள்ளைவாரணனாரும் இலக்குவனாரும் எடுத்துக்காட்டிய இடைச்செருகல்கள் நீக்கப்படுமாயின், அது ஆரியச்சார்புடைய நூலன்று என்பதையும, இடைக்கழகக்கால இலக்கண நூலாக அது இருந்திருக்கக் கூடுமென்பதையும், பேராசிரியர், தனிநாயக அடிகள், எச்.எஸ் டேவிட் அடிகள், பிரான்சுவா குரோ, வ.சுப. மாணிக்கம போன்றோர் கூறியுள்ளது போல அஃதே கடைக்கழக நூல்களுக்கு வழிகாட்டியாய், கவிதையாக்க மனச்சாட்சியாய் விளங்கியிருக்க வேண்டுமென்பதையும் பாவாணர் ஏற்றுக் கொண்டிருப்பார் என்பது திண்ணம்.

இறையனார் களவியல் உரை கூறும் முச்சங்க வரலாறு முழுப்பொய்யென்றும், சைவர்கள் கட்டிவிட்ட கதையென்றும், பௌத்த சங்கங்கள் இருந்தமைக்கே வரலாற்று ஆதாரங்கள் இருக்கின்றன வென்றும் ‘புரட்சிக் கருத்துகளை’ நம் தமிழ் அறிஞர்களில் சிலர் அள்ளி வீசியுள்ளனர். அன்னார் கைம்ராபின் (Chaim Rabin) என்னும் யூதப்பேராசிரியர் Studies in Religion என்னும் தலைப்புடைய 1973–74ஆம் ஆண்டிற்கான ஆங்கில இதழில் எழுதியுளள ‘The Song of Songs and Tamil Poetry’ எனும் கட்டுரையில் கூறியுள்ள ஆய்வு முடிவுகளை அறிந்து கொள்வது நல்லது விவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள அரசன் சாலமனின் ‘பாடலகளுள் எல்லாம சிறந்த பாடல்’ எனும் கவிதை, தமிழ் அக இலக்கிய மரபிறகுக் கடன்பட்டிருப்பதை, இலக்கிய, இலக்கண, மொழியியல், வரலாற்றுச் சான்றுகள் தந்து அவர் நிறுவுவாா

இப்பாடலின மூன்று சிறப்புக் கூறுகள் தமிழ் அக இலக்கிய மரபிற்கே உரியவை என்று அவர் அடையாளம் காட்டுவார்.

1. ஒரு பெண் தன் காதல் உணர்வுகளை இப்பாடலில் வெளிப்படுத்துகிறாள். அவளே இப்பாடலின் தலையாய பாத்திரமாகவும் விளங்குகிறாள். அவளால் ஐம்பத்திஆறு செய்யுள் பத்திகள் பேசப்படுகின்றன. ஆண் பாத்திரம் பேசுவதாக பெரும்பாலும் முப்பத்திஆறு பத்திகளே. அவனுடைய கூற்றுகள் பெரும்பாலும் அவளது அழகைப் பற்றியவை; அவளுடைய கூற்றுகளில் ஆழமான, அரிய உணர்வுகள் புதைநது கிடக்கின்றன. ஒரு பெண் தன்னுடைய உள்ளார்ந்த உணர்வுகளை வெளிப்படுத்துவதென்பது யூத இலககிய மரபில் இல்லாத ஒன்று.

2. இப்பாடலில், இயற்கை, மாந்தரிடம் நட்புணர்வு கொண்டதாகப் படைக்கப்பட்டுள்ளது. காதலர் சேர்க்கையால் அடையும் உடலின்பம் குறிப்பாக உணர்த்தப்படும் இடங்களிலெல்லாம் அது இயற்கைச் சூழல்களில் நிகழக் காணலாம். விவிலியத்தின் பிறபகுதிகளில் இயற்கை மனிதனுக்குப் பகையானதாகக் காட்டப்படுகிறது.

3. பெண்பாத்திரத்தின் கூற்றுகளில் காதலனுக்காக அவளது ஏக்கம் நிறைந்த தவிப்பு ஓங்கி நிற்கும் உணர்வாகிறது. ஒரு பெண் தன் ஏக்கம் நிறைந்த பெரு விருப்பத்தைப் பேசுவதென்பது இம்மரபில் கிடையாது. ஏழாம் நூற்றாண்டு அரபுக் கவிதைகளிலும் இடைக்காலத்தில் பிரான்சில் வாழ்ந்த நாடோடிபபாடகர்களின் பாடல்களிலும் ஆண் தன் ஏககத்தை வெளிப்படுத்த, பெண் அடைய முடியாதவளாகக் காட்டப்படுவாள்.

இச்சிறபபுக் கூறுகள் ஒருங்கே தோன்றும் தொன்மையான கவிதை, தமிழரின் சங்கக் கவிதையே என்பார் கைம்ராபின். இவவொற்றுமைக் கூறுகளை விளக்கக் கடைச் சங்க இலக்கியங்களிலிருந்து மூன்று சான்றுகள தருவார்.

முதல் சான்று : கபிலர் பாடிய குறுந்தொகைப் பாடல்

செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பால் ஆர மாந்திப்
பெருவரை நீழல் உகளும் நாடன்
கல்லினும் வலியன் தோழி;
வலியன் என்னாது மெலியும் என் நெஞ்சே.

(குறுந்தொகை, 187)

திருமணத்தை விரைவில் முடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் பொருள்தேடத் தலைவன் சென்றுவிட, பிரிவாற்றாத தலைவியின் ஏக்கததை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

இரண்டாம் சான்று : கபிலர் பாடிய ஐங்குறுநூற்றுப் பாடல்

அன்னாய் வாழி வேண்டன்னை கானவர்
கிழங்கு அகழ் நெடுங்குழி மல்க வேங்கைப்
பொன்மலி புதுவீ தாஅம் அவர் நாட்டு
மணி நிற மால்வரை மறைதொறிவள்
அறைமலர் நெடுங்கண் ஆர்த்தன பனியே.

(ஐங்குறுநூறு, 208)

இச்சிறு பாடலில் உள்ள இயற்கைக் காட்சியும் தலைவியின் உணர்வை நுட்பமாக வெளிப்படுத்தும் கவிஞனின் உளவியல் அறிவும் கூர்ந்து நோக்கற்பாலவை.

மூன்றாம் சான்று : ஆவூர்க் காவிதிகள் சாதேவனார் பாடிய நற்றிணைப் பாடல்

பாம்பளைச் செறிய முழங்கி வலனேர்பு
வான்தளி பொழிந்த காண்பின் காலை
அணிகிளர் கலாவம் ஐது விரித் தியலும்
மணிபுரை எருத்தின் மஞ்ஞை போல நின்
வீபெய் கூந்தல் வீசுவளி உளர

ஏகுதி மடந்தை எல்லின்று பொழுதே
வேய் பயில் இறும்பிற் கோவலர் யாத்த
ஆ பூண் தெண்மணி இயம்பும்
ஈகாண் தோன்றும் எம் சிறு நல்லூரே.
(நற்றிணை, 264)

காதலின் நிறைவிற்கும் இயற்கையில் ஈடுபாட்டிற்கும் உள்ள உறவை இப்பாடல் தெளிவாக எடுத்துக்காட்டுகிறதென்றும் காதலின் நிறைவிற்கு அவிழ்ந்த கூந்தல் குறியீடாகிறது என்றும் கைம்ராபின் விளக்குவார்.

விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் வணிகக் கப்பல்களில் குரங்குகளும் மயில்களும் மணப்பொருள்களும் சாலமன் நாட்டிற்கு வந்ததைப் பற்றியக் குறிப்பு காணப்படுகிறது இப்பொருள்களோடு தமிழ் அகப்பாடல்களும் வணிகர்களால் கொண்டு செலலப்பட்டிருக்கவேண்டும் என்று அழகாக எடுத்துரைக்கும் கைம்ராபின், கால ஆராய்ச்சியையும் மேற்கொள்வார் கடைச்சங்க காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.இரண்டாம் நூற்றாண்டு வரையென்று தமிழ் அறிஞர்களே சொல்லிக் கொண்டிருக்கும்போது, இதற்குப் பல நூற்றாண்டுகள் முன் வாழ்ந்த மன்னன் சாலமன் காலத்தில் இத்தாக்கம் எவ்வாறு நிகழ்ந்திருக்கக் கூடும் என்ற வினாவை எழுப்பி, அவர் முச்சங்க வரலாறு முற்றும் உண்மையானதென்றும் தமிழ் அக இலக்கிய மரபு தலைச்சங்கத்திலேயே சிறப்புற்று இருந்திருக்க வேண்டுமென்றும் அதன தாக்கத்தையே சாலமனின் பாடலில் காணலாமென்றும் விடையளிப்பார். இதனைப் புலப்படுத்தும் அவர் கூற்று வருமாறு :

தமிழர் தம் வரலாறு கி.மு. ஆயிரம் ஆண்டிற்கு முற்பட்டதென்றும் அவர்களுக்குக் கிடைத்திருக்கிற சங்கக் கவிதையானது மூன்றாம் சங்கத்தின் படைப்பென்றும் அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த இரண்டு சங்கங்களின் இலக்கியங்கள் மூன்றாம் சங்கத்தின் இலக்கியங்களை விட அளவில் மிக அதிகமென்றும் சொல்லுவது தலைமுறை

தலைமுறையாக வரும் மரபுவழிச் செய்தியாகும். தென்னிந்தியாவின் கீழைக் கடற்கரை பின்னடைந்த போது பெருஞ்செல்வமுள்ள தமிழ் நகரங்கள் கடலால் கொள்ளப்பட்டனவென்றும் தமிழர்கள் வலியுறுத்திச் சொல்கிறார்கள். சிந்துவெளிப் பண்பாட்டு எழுத்தானது தமிழ்மொழியைச் சார்ந்தது என்று ஸ்காண்டினேவிய நாட்டு அறிஞர்கள் ஆய்வில் கண்டு கூறுவதால், இது பற்றிய சிக்கல் இன்னும் விரிந்த தளத்தை உட்கொண்டதாகிறது. இப்பொழுதைய திராவிட இந்தியாவின் வடக்கு எல்லை வரையிலும் சிந்துவெளிப் பண்பாடு பரவியிருந்தது என்று கருதப்படுவதால் அப்பண்பாட்டுக்கு உரியவர்கள் திராவிடர்கள் என்று அடையாளம் காண்பதும் கி.மு. இரண்டாமாயிரம் ஆண்டுக் காலத்தின்போதே தென்னிந்தியாவின் சில பகுதிகளிலேனும் திராவிடக் குடியிருப்பு தொடர்ந்து இருந்திருக்க வேண்டும் என்றும் முடிவு கட்டுவது தவறாகாது.

இதிலிருந்து தமிழர்கள் ஒரு பெருமைக்குரிய கலை, இலக்கியப் பண்பாட்டைப் பெற்றிருந்தார்கள் என்பது பெறப்படும். எனவே, சங்க இலக்கியத்திற்கு முன் ஒரு நீண்ட சிறப்பான மரபு இருந்ததென்று தமிழர்கள் முன் வைக்கும் கோரிக்கையில் உண்மை இருக்க வேண்டும்.

கைம்ராபின், இலக்கியம், மொழியியல், வரலாறு, அகழ்வாய்வு ஆகிய துறைகளிலிருந்தெல்லாம் தரும் ஏராளமான சான்றுகள் விவிலியத்துப் பழைய ஏற்பாட்டில் உள்ள சாலமனின் பாடலில் தமிழ் அக இலக்கியத்தின் தாக்கம் இருக்கிறதென்பதை நிறுவுவதோடு தமிழகத்தே முச்சங்கங்கள் இருந்திருக்க வேண்டுமெனபதையும், கடைச் சங்கத்து அக இலக்கிய மரபு தலைச்சங்கததிலேயே காலூன்றி இருக்க வேண்டுமெனபதையும், தொல்காப்பியம் இடைச்சங்க இலக்கண நூலென்றும் கடைசசங்க நூல்கள் அதறகுப் பினனால் வநதவையென்றும இறையனாா களவியல் உரை கூறுவது வரலாற்று உண்மை என்பதையும் மெயப்பிககும.

ஆசாரிய ஹ்ருதய ஸாரம் என்னும் மாறன் திருவுள்ளம்

முனைவர். இ.கி. இராமசாமி
மேனாள் தமிழ்த்துறைத்தலைவர்,
யாதவர் ஆடவர் கல்லூரி,
மதுரை - 17.
கைபேசி: 9842008954

அறிமுகம்

'ஈடு முப்பத்தாறாயிரம்' என்ற உரையினை எழுதி மாறன் மறைப்பொருளை உலகிற்கு உணர்த்திய பெருமைக்குரியவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை. அவருக்கு இரண்டு திருக்குமாரர்கள்; மூத்தவர் - பிள்ளைலோகாசாரியர்; இளையவர் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார். இந்த அழகிய மணவாளப் பெருமாள் அருளிச் செய்தவை – திருப்பாவைக்கு ஆறாயிரப்படி வியாக்கியானம் (உரை விளக்கம்), அமலனாதிபிரான் வியாக்கியானம், கண்ணிநுண் சிறுதாம்பு வியாக்கியானம், பட்டோலை, அருளிச்செயல் ரஹஸ்யம், ஆசார்ய ஹ்ருதயம் முதலியன.

இவற்றுள் ஆசார்ய ஹ்ருதயம் பல படியாலும் ஒப்புயர்வற்றது. காரணம், நம்மாழ்வார் செய்தருளிய பாசுரங்களைக் கொண்டு (திருவாய்மொழி) அவருடைய திருவுள்ளக் கருத்துகளைத் தெளிவுடன் வெளிப்படுத்துவது அதனால செந்தமிழில் மாறன் திருவுள்ளம் என்று அழைக்கப்படுகின்றது. நான்கு பகுதிகளையுடைய இந்நூலை 'செவிக்கினிய செஞ்சொல் மாலை' என்று பாராட்டுகின்றார் பிரதிவாதி பயங்கரம அண்ணங்கரசாரியார் (மேற்படி நூல், முகவுரை). ஆனால், இது மணிபபிரவாள நடையில் ஆனது இதனை ஓதும் முறையினைத் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் கேட்கலாம். மற்ற இடங்களில் அரிதாகவே கேட்கமுடியும என்ற தகவலை அண்ணங்கரர் பதிவுசெய்துள்ளார். இப்போது நிலைமை மாறி இருக்கலாம்.

வடமொழியிலும் தென்மொழியிலும ஆழங்கால்பட்ட மாவியம் அன்பர்க்கன்றி பிறரால் இந்தப பக்தி இலக்கியததைப புரிந்துகொள்ள

முடியாது அதனால் இது 'உபய வேதாநத ரஹஸ்யம' எனப்படுகிறது. வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள் உபயவேதாந்தாச்சாரியர்கள் எனப்படுவர் சுருக்கமாக உ.வே. என்று அழைக்கும் வைணவ மரபும் நிலவுகின்றது.

பயிலப்பயிலப பேரின்பம் பயக்கும இந்தப் பக்தி இலக்கியத்தை எவ்வளவு எளிமைப்படுத்தி எழுத நினைத்தாலும் கருததுவளம் கனமாக இருபபதால் தம்மால் எளிமைப்படுத்த இயலவில்லை என்று பதிப்புரைகாரரான அண்ணங்கரார்யதாஸன் அவையடக்கமாகக் கூறியுள்ளார். மாறன் மனக்கருத்தைக் கூறமாட்டாமல் மணவாளமாமுனியே தவித்துள்ளார். அப்படியிருக்கத் தம்மால் எப்படி இயலும் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றார்.

திராவிடவேத சாகரம்

'மாதவத்தோன் மாறன்மனங் கூறும் மணவாளன்' என்ற நூற்பெயரையும் ஆக்கியோன் பெயரையும் தமிழ்த்தனியன் சுட்டுகின்றது. சமற்கிருதத் தனியன் இன்னும் ஒருபடிமேலே சென்று **'த்ராவிடாம் நாயஹ்ருதயம்'** என்று நூற்பெயரைச சுட்டியுள்ளமை கவனிக்கத்தக்கது. தமிழர் மரபில் வந்த மாலியத்தைப் பாடும் இலக்கியத்திற்கு **த்ராவிடாம் நாயஹ்ருதயம்** என்ற சொற்றொடர் தலைப்பாகச் சூட்டப்பெற்றுள்ளது. அதேசமயம் மாறன் திருவுள்ளத்தைத் தேனும் பாலும் கனனலும் அமுதும் கலந்து கொடுத்தது போல மணவாளமாமுனி சுவைபட மொழிந்துள்ளார் என்கின்றார் அண்ணங்கரார்யதாஸன்.

திருவாய்மொழி

நம்மாழ்வாரை மாறன் என்றும் சடகோபன் என்றும் அழைப்பது வைணவ மரபு. அவர் பாடிய திருவாய் மொழியைத்தான் 'திராவிடவேத சாகரம்' என்று தமிழ்ப்படுத்தி மொழிவர் திருவாய்மொழிக்கு சமற்கிருதத்தில் தனியன் பாடிக்கொடுத்த நாதமுனிகள் **த்ராவிடவேத சாகரம்** என்று திருவாய்மொழியைப் பாராட்டியுள்ளார.

அந்தச சொற்றொடருக்கு நேரான தமிழாக்கம், **'திராவிட மறைக்கடல்'** என்பதாகும் பெரியோர் ஆழ்ந்து சிந்தித்துப் பாக்க வேண்டிய தமிழ்மறை என்பது அதன் விளக்கம். இந்த விளக்கத்திறகு ஆதாரமாக அனந்தாழ்வான் பாடியளித்த தமிழ்த தனியன் அடிப்படையாகும். இவர் திருவாய்மொழியைச் **செந்தமிழ் வேதம்** என்று பெருமிதம் தோன்றப் பாடியவர்.

சீரார் சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும்
பேராத வுள்ளம் பெற

(திவ்யப்பிர. திருவேங்கடத்தான் திருமன்றம், 2009, ப.299)

அனந்தாழ்வானைத் தொடர்ந்து பட்டர் அவர்களும் திருவாய்மொழிப் பாசுரங்களைத் 'தமிழ்மறை' என்று போற்றினார். இன்னும் ஒருபடி மேற்சென்று திருவாய்மொழியாகிய தமிழ்மறையினைப் பெற்ற நற்றாய் நம்மாழ்வார் (சடகோபன்) என்றார்.

வான்திகழும் சோலை மதிளரங்கன் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும் ஈன்ற
முதல்தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமா நுசன் (மேலது)

திராவிட இறைமைக் கோட்பாட்டை இவ்வாறு பாடிய நம்மாழ்வாரின் திருப்பாதங்களை வணஙகுவோம் என்றனர் ஈச்வர முனிகளும் சொட்டை நமபியும். சிலர் ஆரியவேதத்தைத் தமிழில் தந்த சடகோபன் என்று அர்த்தப்படுத்திக் கொளளுவது ஏற்புடையதன்று. தமிழ்மறையினைப் பாசுரங்களாக வடித்தார் சடகோபன் என்பதே பொருத்தமானது. நாதமுனிகள வடமொழியில் செய்த தனியன் **'திராவிடவேதம்'** என்றே திருவாய்மொழியைக் குறித்துள்ளது. அது வடசொல் தொடர் என்பதனாலேயே ஆரிய இறைமைக கோட்பாட்டைச சுட்டுவதாக எடுததுக்கொள்ளுதல் எப்படிப் பொருநதும்.

தமிழ் - பக்திமொழி

ஆங்கில இலக்கிய ஆராய்ச்சியும், தமிழ் இலக்கிய ஆராய்ச்சியும் செய்து ஒபபிலக்கிய ஆய்வுகளில் இருவேறு முனைவா பட்டங்களைப் பெறற பெரும் பேராசிரியர் ப.மருதநாயகம் **'பக்தி இயக்கத்தின் மூலவேர்கள்'** என்ற ஆய்வுக்கட்டுரையின் முடிவாகச் சொல்லிய கருத்தும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. அவரது கருத்தே இக்கடடுரைக்குத் தூண்டுகோலாகவும் துணையாகவும் அமைந்தது.

"பக்தி இயக்கம் தமிழகத்தின் தென்பகுதியில் தோன்றி இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பரவியது. பக்திப் பாவலாகள் முதலில் தமிழ்கூறும் நல்லுலகில்தான் தோற்றம் பெற்றனா். பின்னால் இந்திய மொழிகள் யாவற்றிற்கும் பொதுவான பாடுபொருளாக வளர்ச்சிபெற்றவை பல ஆழவார்களின் பாடல்களில் முதன்முதலில் சிறப்புற்றவை" **(செந்தமிழ் இதழ், சனவரி 2020, ப.29)**

பேரா.ப.மருதநாயகம் தாம் கண்டறிந்த உண்மைக்கு ஆதாரமாக அறிஞா் ஏ.கே.ராமாநுசனின் கருத்துவளத்தை மேற்கோள் காட்டுகின்றார்.

"தமிழ் மரபே பத்தாம் நூற்றாண்டில் பாகவத புராணத்தையும் அதன்மூலம் இந்தியமொழிகளின் பக்தி இலக்கியங்கள் பலவற்றையும் சென்றடைகிறது. தமிழ், பக்திப் பாவலா்களுக்கும் இறையியல வல்லுநருக்கும் ஒருசேர இன்பம் அளிக்கும் மொழியாக அமைந்ததற்கு அது இலக்கிய மொழியாகவும் பேச்சு மொழியாகவும் வளர்ச்சி பெற்றிருந்ததே காரணம்"(மேலது).

பக்தி இயக்கத்தின் மூலம்

தமிழ்ப் பக்தி இயக்கம் தானாகத் திடுமெனத் தோன்றி விடவில்லை. அது சங்க இலகக்கியங்களிலிருந்தே படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்தது இன்னும் சொல்லப்போனால பக்தி இலக்கியம், சங்க இலக்கியத்திறகுக் கடன்படடது என்கினறாா

பேரா.ப.மருதநாயகம (மேலது, ப.30). வேற்றுமொழிப் பண்பாட்டிலிருந்து கடன்பெற்றது அன்று தமிழ்ப் பக்தி மரபு.

பேரா.ப.மருதநாயகம், ஏ.கே ராமாநுசன் ஆகிய இருவரும் கண்டறிந்து சொல்லிய உண்மை, தனிநாயக அடிகளாரின் கருத்தினை அடிப்படையாகக் கொண்டது. பல்வேறு நாடுகளுக்கும் சென்று அந்த மக்களின் மொழிவளத்தை அறிந்து வந்த தனிநாயக அடிகளார் எழுதிய களஆய்வு நூலில் பதிவுசெய்த உண்மை இங்கு நினையத்தகும்:

ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும், இத்தாலியம் காதலின் மொழி என்றும், கூறுவது ஒருபுடை ஒக்குமெனின், தமிழ் இரக்கத்தின் மொழி எனக் கூறுவது இனிது பொருந்தும்; பக்தியின் மொழி எனலுமாம். இரக்கமும் பக்தியும் மனம் உருகுதலால் தோன்றும் பண்பாதலால் கண்டுணர்க. தமிழில் இரங்குவது போல, வேறு எம்மொழியிலும் இரங்குவது அரிது. எனவே, பரிபாடல், தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் போன்ற பனுவல்கள் தோன்றியவை இயற்கையேயாம்.

(தமிழ்த்தூது, ப.20)

தமிழ் வேதம் சிறப்புடையது

திருவேஙகடத்தான் திருமன்ற அறக்கட்டளை வெளியிட்டுள்ள (2006) நாலாயிர திவ்வியப்பிரபந்தத்திற்கு முகவுரை எழுதிய கி.வேங்கடசாமி ஓர் இன்றியமையாத கருத்தை அதில் பதிவு செய்துள்ளார்.

வடமொழி வேதத்திற்குரியவர் அந்தணர், தமிழ் வேதத்திற்கு எல்லோரும் உரியர் என்ற சிறப்பு நோக்கி வடமொழி வேதத்தினும் தமிழ்வேதம் சிறப்புடைதாகும் என்பர்.

(ப.10)

தமிழ் வேதத்தை மறுத்துரைத்த பெரியவாகளை நோக்கிக் கம்பர் தாம் பாடிய **சடகோபரந்தாதி**யில் சொன்னவையும் இங்கு மனங்கொள்ளத் தக்கவை ஆகும்.

சாதிக்குமே பரதத்துவத்தைச் சமயத்து இருக்கைச்
சேதிக்குமே ஒன்று சிந்திக்குமே அதனைத் தெரியப்
போதிக்குமே எங்கும்ஓங்கிப் பொதுநிற்கும் மெய்யைப் பொய்யைச்
சோதிக்குமே உங்கள் வேதம் எங்கோன் தமிழ்ச் சொல்லெனவே
(சடகோபரந்தாதி, பா.18)

முடிவுரை

'உங்கள் வேதம்'; 'எங்கோன் தமிழ்ச்சொல்' என்று பகுத்துக் காட்டிய தமிழ்வேதம் திருவாய்மொழி ஆகும் என்று உறுதிப்படுத்திவிட்டார் கம்பர். மாறன் திருவுள்ளத்தை வடமொழி பேசும் அந்தணர்க்கு உணர்த்திட மணவாள மாமுனிகள் ஆசாரிய ஹ்ருதயத்தை மணிப்பிரவாளத்தில் பாடினார் என்பதும், அதற்குப் பின்னாளில் அண்ணங்கராசாரியார் மணிப்பிரவாள நடையில் உரை எழுதினார் என்பதும் தெளிவாகின்றது,

குறிப்பு :

1977–1980 - களில் **தமிழில் பாயிரங்கள்** என்ற பொருளில் முனைவர் பட்ட ஆராய்ச்சி ஏட்டினை எழுதியபோது பொருண்மையும் பரப்பும் ஆய்வேட்டின் அளவும் கருதி விலக்கப்பட்ட தகவல்களையும், 2020 சனவரித் திங்கள் **செந்தமிழ்** - இதழில் **பக்தி இலக்கியத்தின் வேர்கள்** என்ற பொருளில் அறிஞர் ப. மருதநாயகம் எழுதியிருந்த ஆராய்ச்சிக் கட்டுரையினால் ஏறபட்ட தூண்டுதலையும் வைத்து இவ்விளககமுறைக் கட்டுரை உருவாயிற்று.

சங்கச் செய்தி

20.05.2020, 21.05.2020 ஆகிய இருநாள்கள் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பாக, எம்.எஸ்.செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து 'கோவிட்- 19 சூழலில் மன மற்றும் சமூக அக்கறை' என்ற பொருண்மையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் இணையவழியில் நடைபெற்றது. பெருந்தொற்றுக் காலத்தில் மாணவர்கள் தங்களின் மனநலம் காக்க வேண்டியதின் அவசியம், வழிமுறைகள் குறித்தும், இச்சமூக நலத்தைக் காப்பதில் மாணவர்கள் ஆற்றவேண்டிய கடமைகள் குறித்தும் கருத்துரைகள் வழங்கப்பட்டன. கல்லூரிச் செயலர் இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி தலைமை வகித்தார். மதுரை காமராசர் பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர் ம.கிருஷ்ணன், பதிவாளர்(பொ.) முனைவர் சங்கர் நடேசன், பேராசிரியர் மற்றும் புலத்தலைவர் முனைவர் சு.கண்ணன் உள்ளிட்ட பலருடன் பேராசிரியர்களும் மாணவர்களும் இக்கருத்தரங்கில் பங்கேற்றுச் சிறப்பித்தனர். கல்லூரி நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி மற்றும் முனைவர் பா.நேருஜி ஆகியோர் இந்நிகழ்வினை ஒருங்கிணைத்தனர்.

ஜூலை திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



கு. அழகிரிசாமி
(ஜூ லை.5)

மயிலை சிவமுத்து
(ஜூ லை.6)

இரா. இராகவையங்கார்
(ஜூ லை .11)



சுவாமி விபுலானந்தர்
(ஜூ லை.19)

வேதநாயகம் பிள்ளை
(ஜூ லை.21)



சுப்பிரமணிய சிவா
(ஜூ லை.23)

மு. கோவிந்தசாமி
(ஜூ லை.23)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

முனைவர் **ம.திருமலை**

முனைவர் **இ.மறைமலை**

முனைவர் **செ.கந்தசாமி**

முனைவர் **பெ.சுயம்பு**

முனைவர் **உ.கருப்பத்தேவன்**

முனைவர் **அ.நந்தினி**

முனைவர் **அ.தட்சிணாமூர்த்தி**

முனைவர் **கு.வெ.பாலசுப்பிரமணியன்**

முனைவர் **மு.மணிவேல்**

முனைவர் **இ.கி.ராமசாமி**

முனைவர் **உல.பாலசுப்பிரமணியன்**

முனைவர் **ச.கவிதா**

RNI Regd. No.5507/56

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,	From
செயலாளர்	**THE SECRETARY**
நான்காம் தமிழ்ச் சங்கம்	The Fourth Tamilsangam
54, தமிழ்ச் சங்கச் சாலை,	54, Tamil Sangam Road,
மதுரை - 625 001.	Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1